இன்னும் ஐந்துமணித்துளியில் எதிரியின் போர்க்கப்பல் வெடிக்கும் -தமிழ்
ஈழமென் வெற்றிச் செய்தி படிக்கும் 2
என்னை நீவாழத் தருகிறேன் -தமிழ்
ஈழத்தாயே போய்வருகிறேன். 2

நேற்றுச் சிங்களவன் கொடிதாங்கினோம்
நெஞ்சில் அவன்கொடுத்த அடிவாங்கினோம் 2
மாற்று வழிகண்டு படைகூட்டினோம்
மானம் தமிழ்மண்ணில் நிலைநாட்டினோம்

இன்னும் நான்கு மணித்துளியில்
எதிரியின் போர்க்கப்பல் வெடிக்கும் -தமிழ்
ஈழமென் வெற்றிச் செய்தி படிக்கும்.

எங்கள் கடலெல்லை யார்தாண்டுவார் ஈழ மணிநாட்டை எவன்தீண்டுவான்
குண்டு தமிழ்நெஞ்சை யார்கொல்லுவான்
புலிகள் உயிர்மூச்சை எவன்வெல்லுவான்

இன்னும் மூன்று மணித்துளியில் எதிரியின் போர்க்கப்பல் வெடிக்கும் -தமிழ்
ஈழமென் வெற்றிச் செய்தி படிக்கும்.

கொலைஞர் ஆட்சிவிழ நான்தாக்குவேன்
கொடியர் படைவெறியர் உயிர்போக்குவேன் 2
தலைவர் ஆணைநான் நிறைவேற்றுவேன்
தமிழர் தாய்மண்ணைக் காப்பாற்றுவேன்

இன்னும் இரண்டு மணித்துளியில் எதிரியின் போர்க்கப்பல் வெடிக்கும்தமிழ்
ஈழமென் வெற்றிச் செய்தி படிக்கும்.

இன்றுகளத்தில் நான் மடிதல்கூடும் என்பின்னும் புலிகள் படைபோராடும் 2
வென்று தமிழீழம் வாகைசூடும் விடுதலைக் கொடி காற்றிலாடும்
இன்னும் ஒரு மணித்துளியில் எதிரியின் போர்க்கப்பல் வெடிக்கும் -தமிழ்
ஈழமென் வெற்றிச் செய்தி படிக்கும். என்னை நீவாழ தருகிறேன் -தமிழ்
ஈழத்தாயே போய் வருகிறேன்.